**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.37/2023**

2025 –ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 06 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 06.08.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. லஷ்மிபிரபா (PW ) | வயது | : | 55/2025 |
| த/க. பெயர் | : | திரு. கணேசன் | தொழில் | : | வீட்டு குடித்தனம் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | | மன்னார்குடி |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) தாவா சொத்தானது தஞ்சாவூர் மெயின்ரோடு, நெடுவாக்கோட்டை கிராம காளியம்மன் கோவிலுக்கு வட புறம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து உள்ள நகரில் மொத்தம் எத்தனை வீட்டு மனை உள்ளது என்றால் 44 உள்ளது. எனது வீட்டு மனை எண் என்னவென்றால் 43 ஆகும். எனது வீட்டு மனைக்கு மேல் புறம் வாய்க்கால் உள்ளது என்றால் இல்லை மனை எண்.44 உள்ளது. எனது வீட்டு மனைக்கு வடக்கு புறம் என்ன உள்ளது என்றால் வடிக்கால் வாய்க்கால் உள்ளது. மிகப்பெரிய வடிக்கால் கரை உள்ளது என்றால் சரிதான். **(தற்போது சாட்சியானவர் வடக்கு புறம் மனை எண்.44 இருப்பதாக சொல்கிறார்.)**
2) எனது மனைக்கு வடபுறம் பிரதிவாதி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதியானவர் அவரது வீட்டிற்கு நான் செல்லும் பாதை வழியாக தான் சென்று வர வேண்டும் என்றால் இல்லை, அவருக்கென்று தனிப்பாதை உள்ளது. வாய்க்காலில் தண்ணீர் போகும்போது எந்த வழியாக வருவார் என்றால் வாய்க்கால் கரை வழியாக போவார்.
3) பிரதிவாதியானவர் எனது இடத்தின் வழியாக தான் சென்று வருவதற்கு பாதை உள்ளதை நான் தடுப்பதற்காக தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்து தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு பாதை இருக்கும் விபரத்தை பார்த்து அறிக்கை தாக்கல் செய்ய எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான்.

4) பிரதிவாதி எனது வழியை பயன்படுத்துகிறார் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு வேறு எதும் வழி இல்லை என்றால் சரிதான். **(தற்போது சாட்சியானவர் வேறு வழி இருந்தும் எங்கள் வீட்டு வழியாக தான் செல்வதாக சொல்கிறார்.)**

5) எனது வீட்டு வழியயாக தான் பிரதிவாதியானவர் 20 ஆண்டுகளாக பாதையாக பயன்படுத்தி வருகிறார் என்றால் இல்லை. பிரதிவாதியின் வசதி உரிமையை தடை செய்யும் நோக்கில் நான் தாக்கல் செய்துள்ள வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நான் வழக்குரையில் சொல்லியுள்ளவாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.08.11 10:35:41 +0530

District Munsif
Mannargudi.